BDJ-2-TA

# இயேசுவை வீழ்த்துவதற்கான போராட்டம் – நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியில், இயேசுதுவத்தை பற்றி இன்றைக்கு இணையதளங்கள் திரைப்படங்கள் தொலைக்காட்சி நிகழ்சிகள் பிரபல நாவல்கள், சில பாட புத்தகங்கள் கூட இயேசு ஒரு சாதாரண மனிதர்தான் தன்னை தேவனுடைய குமாரன் என்று சொல்லவில்லை என்பதை மையப்படுத்தி வெளிபடுத்தி வருகிறார்கள். இயேசுவின் மரணத்திற்கு பிறகு, அப்போஸ்தலர்கள் இயேசுவை பற்றிய புதிய கதையை மத்தேயு மாற்கு லூக்கா யோவானியில் பதிவுசெய்திருக்கிரார்கள் ஆதி கிறிஸ்தவர்களுக்கு புதிய ஏற்பாடு இல்லாததினால், உண்மையான கிறிஸ்தவ நம்பிக்கை என்னவென்று தெரியவில்லை. அதன் விளைவாக இயேசுவை குறித்த பலதரப்பட்ட கண்ணோட்டங்கள் உண்டானதா? இந்த கேள்விகளுக்கு கிறிஸ்தவர்கள் எப்படி பதிலளிக்க முடியும்? இன்றைக்கு அதை தெரிந்துகொள்வீர்கள், இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்கின் விசேஷித்த தொகுப்பு.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நீங்க ரிச்சர்ட் டாகின்ஸ் உடைய தி சாட் டெல்யூஷன் என்ற புத்தகத்தை வாசித்திருக்கீங்களா? அவர் ஒரு நாத்திகர், அவர் சொல்ராறு, இயேசுவுக்கு தெய்வீகதுவமான தன்மை இருந்தது என்ற கருத்தை ஏற்றுகொள்ளும் ஆதாரங்கள் மிக குறைவு. உண்மைதானே? சரி, இன்றைக்கு நாம் பார்க்க இருக்கிற காரியங்கள். ஜீசஸ் செமினரியின் மார்க்ஸ் பார்க் கூறுகிறார், சுவிசேஷத்தின் எழுத்திய ஆசிரியர்களான, மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் பல நாட்களுக்கு முன்பு வாழ்ந்த ஒரு மனிதருடைய வாழ்வில் பல காலங்களுக்கு முன்பு நடந்த தொடர்ந்தேர்ச்சியான நிகழ்வுகளை பதிவு செய்திருக்கிறார்கள்.”இதை பற்றி என்ன நினைக்கிறீங்க? மார்க்ஸ் சொன்ன மற்றொரு காரியமும் இருக்கிறது, “வேதாக ரீதியான இயேசு என்பது மிகப்பெரிய பிழை.”

இந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்படியாக உலகின் முன்னணி மேதைகள் இரண்டு பேர் நம்மத்தியில் இருக்கிறார்கள். டேரல் பாக் அவர்கள், நீங்க இவரை ABC மற்றும் NBC, CNNமற்றும் FOX சேனல்களில் பார்த்திருப்பீர்கள். ஒவ்வொருவரு முறையும் வரலாற்று சிறப்பு தொகுப்பு என்று சொல்லும்போது அதில் நிச்சயம் டேரல் இருப்பார். அவர் எங்களோடு இருப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். அவர் ஒரு புத்தகத்தை எழுதுகிறார் “இயேசுவை வீழ்த்தும் சதி” அவரோடு சேர்ந்து எழுதியவர், Dr. டேனியேல் B.வால்லேஸ் எழுத்து விமர்சகர்களில் பிரசித்தி பெற்ற நபர்களில் ஒருவர். மேலும் நம்மிடம் இருக்கிற புதிய ஏற்பாட்டு பதிவுகளை ஆராய்ந்து சேகரித்து கொடுத்த சிறந்த வாசகர்களில் ஒருவராக இருக்கிறார். மேலும் டல்லாஸ் இறையியல் கழகத்தில் பேராசிரியராக இருக்கிறார். நீங்க இரண்டு பேரும் இருக்கிறதுல சந்தோஷப்படறேன்.

கடந்த வார நிகழ்ச்சியை பார்க்காதவர்களுக்கு உதவியாக போன வார, நிகழ்ச்சியை தொகுத்து சொல்வோம், வரலாற்றில் என்ன நடந்தது என்பதை குறித்த ஒரு வரையறை இருப்பதை சொல்லிகொண்டிருக்கிறோம். இந்த உண்மைகளை ஆராய்கிற நிலையில் இயேசு என்கிற நபர் கிமு 5 முதல் கிபி 30 வரை வாழ்த்திருக்கிறார், சிலர் கிபி 33 என்று சொல்லுகிறார்கள் ஆனா பெரும்பாலான மேதைகள் கிபி 30 என்கின்றனர். அது மட்டுமல்ல, இந்த தகவல்கள் எல்லாம்மற்ற கிறிஸ்தவரல்லாத பிற மார்க்கங்களின் ஆவங்கங்களில் இருந்து எடுக்கப்பட்டதாக இருக்கிறது, இயேசுவை பின்பற்றுகிற கூட்டம் இருந்தது அதில் அவர் பன்னிரண்டு பேரை மட்டும் தெரிந்துகொண்டார், பன்னிரண்டு அப்போஸ்தலர்கள். நாஸ்டிக் வேதாகமம் மற்றும் மற்றவைகளிலும் அவர்களது பெயர்கள் இருக்கிறது, தி கிநோஸ்டிக், அவர்களுடைய பெயர்கள் அதில் இருக்கிறது.

உண்மை என்னன்னா, ஒன்றை ஒத்துகொள்ளுகிறார்கள், இந்த பன்னிரண்டு பேர் இருக்காங்கள்ள, அவர்களுடைய பெயர்கள் இதுதா, அவங்க யாருன்ற விளக்கம் இருக்குது. அவங்க இயேசுவோடு மூன்று வருடம் வாழ்ந்திருக்கிறார்கள், அவர் செய்வதை எல்லாவற்றையும் பார்த்தவர்கள், அற்புதங்கள், பிசாசை துரத்துவது, மரித்தோரை உயிரோடு எழுப்புவது. சிலருடைய கருத்து, மேதையர்கள், இதை பற்றி பேசுவதை விரும்புவதில்லை, ஆனா ஏதோவொன்று நடந்திருக்கிறது என்கின்றனர், இயேசு கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்ட பிறகு 50 நாள் கழித்து, மூன்று வருடம் அவரோடு கூட இருந்த அந்த பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் எருசலேமில் நின்று இயேசுவை பார்த்திருந்த மற்ற ஜனங்களுக்கு முன்பாக பிரசங்கித்தனர். அவர்கள் பிரசங்கித்தபோது கிட்டத்தட்ட மூவாயிரம் யூதர்கள் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். மனந்திரும்பிய அந்த மூவாரியம் பேரில் இருந்தவர்கள், ரோம சாம்ராஜ்யத்தில் விட்டு வெளியே புறப்பட்டு சென்றனர். அவர்கள் கேள்விப்பட்ட அந்த பிரசங்கிக்கப்பட்ட போதனையின் அடிப்படையில், அவர்கள் ரோமிலிருந்து எகிப்து மற்றும் துருக்கியில் சபைகளை நிறுவினார்கள்.

இப்ப, அதற்கு பிறகு ஒரு காலத்திற்குள்ளாக நாம் நுழைகிறோம்.... அதை பற்றி நீங்களே சொல்லுங்க. இப்ப ஒரு விஷயம், சபைகள் எல்லாம் நிறுவப்பட்ட பிறகு கேள்வி இப்படி மாறுது, கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் என்ன செய்வார்கள், ஆர்தடாக்ஸ் கிறிஸ்தவர்களின் நம்பிக்கை எது எது இல்லை என்று எப்படி தெரியும், ஏன்னா சபைக்குள் இப்போது புதிய ஏற்பாட்டை கொண்டு வருவதே கிடையாது.

**Dr. டேரல் பாக்:** சரி, அவங்ககிட்ட இருந்தது எல்லாம் உபதேசத்தின் சிறுகுறிப்புகள் தான், அதில் மீதமுள்ளவைகளை தான் நாம் முதல் நூற்றாண்டின் கிறிஸ்தவ ஆவணங்களில் நாம் பார்க்கிறோம். அவர்கள் பொதுவாக அடிக்கடி பாடுகிற தங்கள் கீர்த்தனைகளில் அதன் கருத்தை கூறுகின்றனர், அவை பெரும்பாலும் இயேசுகிறிஸ்துவை உயர்த்தி பிதாவோடு அவருக்கு இருக்கும் உறவை குறித்து கூறுகிறது. சில சடங்காசாரங்களையும் அவர்கள் பின்பற்றுகின்றனர், அவைகளை மார்க்கத்தின் சடங்குகளில் பார்க்க முடியும், அது என்னென்னா, மறு பிறப்பு, பாவத்தை கழுவுதல், பாவத்திற்கு மரித்தல் போன்றவை. அதனால, இந்த எல்லா காரியத்திற்கும்

இடையில் இருக்கிற மைய இறையியலைதான் ஆர்தடாக்சி என்று சொல்லுகிறோம் அதுதான் இந்த நாட்களில் இயேசு பிரசங்கித்த போதனை அதை அப்போஸ்தலர்கள் பிரசங்கித்து கூறினார்கள் என்பதை சபைகளில் வலியுறுத்தி அவர்கள் கடைபிடிக்கும்படி கற்றுகொடுத்து வருகிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், சிலர் சபைக்குள் சிலமாற்றுகருத்துகள் இருந்ததாக கூறுகின்றனர் அதனால் புதிய ஏற்ப்பாட்டில் கூட கிறிஸ்துவத்தில் காணப்பட்ட பலவிதமான கண்ணோட்டங்கள் இருந்ததை ஆவணங்களில் பார்க்கிறோம். அதை பற்றி நீங்க என்ன சொல்றீங்க?

**Dr. டேரல் பாக்:** இப்ப, ஒரு குறிப்பிட்ட காரியத்தின் சில காரியங்களுக்கான ஆதாரங்களை புதிய ஏற்பாட்டில் நம்மால் பார்க்க முடியும். யூதர்களையும் குறிப்பிட்ட வாழ்க்கை முறையை கொண்டிருக்கும் பலவிதமான வாழ்க்கை முறையை கொண்டிருக்கும் புறஜாதியினரையும் ஒன்றாக இணைத்து பார்க்கும்போது, இவை இரண்டையும் இணைக்க முயற்சிக்கும் நிலையில் இருக்கிற அழுத்தத்தை நம்மால் பார்க்க முடியும். அதை நாமே கண்ணார காண்கிறோம். ஆனா பொதுவாக காணப்படுகிற விவாதம் பெரும்பாலும் ஆர்தோப்ராக்சி என்கிற காரியத்தில் தான் உருவாகிறது, ஆர்தடக்சியை எப்படி அப்பியாசப்படுத்துகிறோம், ஆர்தடக்சியை பற்றி விவாதங்கள் கிடையாது. சரி, இயேசுவோடு தொடர்புள்ள சில யூதர்கள் சொல்லியிருக்கிற விஷயம், யூதமார்கம் மாற்றம் அடைவதே இல்லை. நீங்க என்ன செயரீங்கன்னா இயேசுவோடு சிலவற்றை சேர்த்து கொள்கிறீர்கள். நீங்களும் அதே விதமான வாழ்க்கை முறையை கொண்டிருக்க முடியும்." என்கிறார். இந்த பிரிவுகளுக்கு பிறகு சபையானது ஒரு தீர்மானம் எடுத்தது அது ஒரு பெரிய காரியமில்லை. பேதுரு மற்றும் பவுலுக்கு இடையில் நடந்த விவாதத்திற்கான ஆதாரத்தை கலாத்தியர் புத்தகத்தில் பார்க்க முடியும். (கலா. 2:11) ஆனா அதே நேரத்தில், அதாவது ஒரு ஐக்கியத்தின் கூற்றானது பலவிதமான முக்கிய நபர்களுக்கு இடையே கண்ணோட்டங்கள் வேறுபட்டிருக்கும், ஏன்னா அவர்களுடைய இறையியல் ஒன்றுதான். (கலா. 2:9) இதை எப்படி செயல்படுத்துகிறோம் என்பதில் தான் பிரச்சனை வருகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** டேனியேல், நம்முடைய நண்பர்களில் ஒருவர் டீரீம் டீம் மெம்பர் யூதாஸ் சுவிசேஷத்தை ஆய்வு செய்யும்படி நேஷனல் கியோக்ராபிக் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டார். அவருடைய பெயர் கிரேக் ஈவான்ஸ். அவர் பிரப்பிரிகேட்டிங் ஜீசஸ் என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார், அதில் அவர் இந்த கருத்தை பதிவுசெய்கிறார் பலவிதமான ஆர்தடக்ஸ் நம்பிக்கைகள் இருக்கிறது, என்கிறார், பொதுவாக, அதாவது, இயேசு இஸ்ரவேலின் மேசியா என்பதை நீங்கள் விசுவாசிக்காவிட்டால், இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்து உங்களுடைய பாவங்களுக்கான விலையை செலுத்தினார் என்று நம்பாவிட்டால், தம்மை தேவ குமாரன் என்றதை நம்பாவிட்டால், மரணத்தில் இருந்து உயிர்த்தார் என்பதை நம்பாவிட்டால், நீங்கள் கிறிஸ்தவர் கிடையாது. அதை நீங்கள் ஒப்புகொள்கிறீர்களா?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** அதற்கு நான் ஆமேன் என்றிடுவேன், நிச்சயமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** விஷயம் என்னன்னா, இப்ப இயேசு மரித்து விட்டார், அது கி பி 30 ன்னு வைச்சுக்குவோம். இதற்கு இடையில் இருக்கிற காலம், ஆர்தடக்ஸ் அல்லாத நம்பிக்கைகளை மாற்றும் அப்போஸ்தலர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் எல்லா சபைகளுக்கு சென்று வந்தனர். இந்த நபர்கள் எல்லாரும் எத்தனை வருஷம் வாழ்ந்தார்கள், டேரல்?

**Dr. டேரல் பாக்:** சரி, அவர்களில் பெரும்பாலானவர்கள் 60 வருடங்கள் இருந்தாங்க, அதற்கு மேல சிரல் 90 வயது வரைக்கும் இருந்தாங்கன்ற ஆதாரங்கள் நம்மிடம் இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஓகே. உண்மை இதுதான், கிபி 100 வருவதற்கு முன்பே அவர்கள் மரித்துவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது, இல்லையா? ஆனா அவங்க எல்லா இடங்களுக்கு சென்று போதிக்கவும் சீர்ப்படுத்தவும் துவங்கினார்கள். உபதேச கூற்றுகள் என்று இருக்கிறது, போதனை கூற்றுகள் இருக்கிறது, அதை ஆதிகால மேதைகள் அவைகளின் தேதிகள், 30 களின் இடைப்பட்ட காலம் என்று சொல்லுகின்றனர். அதில் சில கீர்த்தனைகளும் அடங்கும் என்கின்றனர், பிலிப்பியர் 2 மற்றும் கொலோசெயர் போன்றவற்றில் இருக்கிறது, அவை முழுவதும் இறையியலை மையமாக கொண்டிருக்கிறது. அதற்கு பிறகு சடங்குகளான ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தி போன்றவை. காலாகாலமாக கடைபிடிக்கப்படுகிற ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தியிலிருந்து பெறப்படும் உபதேசம் என்ன?

**Dr. டேரல் பாக்:** இப்ப, ஞானஸ்நானத்தில் இருந்து பெறப்படும் உபதேசம் என்னவென்றால் புதிய ஜீவனை குறிப்பதாகும், பழைய மனிதன் மரிக்கிறான். அதோடு கழுவப்படுகிற ஒரு காட்சியும் பெறப்படுகிறது, அதினால் சுத்திகரிக்கப்படுகிற காரியமும் அதில் அடங்கும். அப்பறம் புதிய வாழ்வில் எழுப்பப்படுகிரீர்கள். அதினால மறுபிறப்பு அடைகிறார்கள், இது புதிய வாழ்க்கையை குறிப்பதாக இருக்கிறது, புதிய ஆரம்பம், அந்த நபரின் ஆவியானது ஜீவனுள்ள தேவனுடனான உறவை பிரதிபளித்து கூருகிரதாக இருக்கறது. அதற்கு அடுத்தது கர்த்தருடைய பந்தி, நிச்சயமா, இந்த என் இரத்தத்தினால் ஆகிய புதிய உடன்படிக்கையாக இருக்கிறது என்கிறார். )1 கொரி. 11:25) தேவன் செய்வேன் சொன்ன காரியத்தை இயேசு கிறிஸ்து அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார், அவர் முழுமையாக செயல்பட்டு தேவனுடன் ஜனங்களுக்கு உறவை உண்டாக்கும் புதிய உடன்படிக்கையை துவங்கினார். உண்மை இதுதான், உள்ளாக செயல்படவேண்டியது மிக அவசியமான ஒன்று, ஏன்னா அது இல்லாம தேவ நம்மை சிருஷ்டித்த விதமான மக்களாக இருக்க முடியாது.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** ஞானஸ்நானத்தில் சிலவற்றை சேர்க்க விரும்புகிறேன் அவை குறிப்பாக கிறிஸ்தவ வாழ்வில் துவக்கத்தில் கவனம் செலுத்துவதை குறிப்பிடுகிறது. கிறிஸ்துவோடு ஒரு ஒப்பந்தம் செய்கிறீர்கள் அவர் பரிசுத்த ஆவியை அளித்து உங்களோடு ஒரு ஒப்பந்தம் செய்கிறார், தண்ணீர் ஞானஸ்நானம் மற்றும் ஆவியின் ஞானஸ்நானம் இரண்டும் அதிக அர்த்தமுள்ளதாக காணப்படுகிறது, அதோடு, அவற்றை பிரிப்பது மிக கடினமான ஒன்றாகும். அடுத்த கர்த்தருடைய பந்தி இராபோஜனம் எனபது அவருடனான தொடர்ந்து ஐக்கியம் கொள்வதை குறிக்கிறது.

அதனாலதான் சபையில் வாராவாரம் இது அவசியமாக காணப்படுகிறது. ஞானஸ்நானம், ஒரு நபர் ஞானஸ்நானம் பெற்றுகிறார், ஆனால் தேவன் யார் என்பதையும் அவர் நமக்காக செய்த காரியத்தையும் நினைவுகூரும்படி பந்தியை வாராவாரம் தொடர்ந்து அனுசரிப்பது சிறந்ததாக இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அவர் அவர்களுக்காக என்ன செய்திருக்கிறார்?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** அவர்களுக்காக சிலுவையில் மரித்திருக்கிறார், அவர்களுடைய பாவத்தின் விலையை செலுத்தியிருக்கிறார். மறுபடியும் உயிர்த்தார். திறவுகோல் காரியம் என்னன்னா, என்னுடைய கருத்துபடி, கர்த்தருடைய பந்தி என்பது கிறிஸ்துவோடு ஜனங்களுக்கு உண்டாயிருக்கும் பிணைப்பு. "நீங்கள் என் மாம்சத்தை புசித்து என் இரத்தத்தை பானம் பண்ணுவீர்கள்." (யோவான் 6:56)

**Dr. டேரல் பாக்:** ஆமா,. அது, மட்டுமில்ல, என்னுடைய கருத்துபடி அது, சுவிசேஷங்கள் அனைத்தும் வெறும் பாவத்தை மன்னிக்கும் காரியமாக இல்லாததற்காக அதை பாராட்டியாக வேண்டும். சுவிசேஷமானது ஜீவனுள்ள தேவனோடு துண்டிக்கப்பட்டிருந்த உறவானது மீண்டும் நிலைபடுத்தப்படுவதாக இருக்கிறது. பாவ மன்னிப்பு அது பெறப்பட்ட ஒன்றாக காணப்படுகிறது. ஆனா சுவிசேஷத்தின் பாவ மன்னிப்பு என்கிற பகுதியை மட்டும் நாம் பிடித்து கொண்டு அந்த மன்னிப்பின்மூலம் தேவன் நமக்கு செய்கிற காரியத்தை பிடித்து கொள்ளாமல் விட்டு விடுகிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்ப நமக்கு கிடைத்த உண்மை என்ன என்றால், மறுபடியும், கிபி 30ல் இயேசு மரித்தார், அதோட அந்த காட்சி முடிஞ்சிருச்சு. ஆனா இப்ப அப்போஸ்தலர்கள் ஜீவனுள்ளவர்களாய் பிரசங்கிக்கவும் போதிக்கவும் துவங்குகிறார்கள். நம்ம கிட்ட இருக்கிற, ஆதாரம் இதுதான், இறையியலின் பதிவுகளை கொண்டிருக்கும் கீர்த்தனைகள். உங்களுக்கு தெரியுமா, எளிதில் நினைவில் கொள்ள கூடியதும் எனக்கு மிகவும் பிடித்த பகுதி எதுஎன்று கேட்டால் பேதுரு சொன்னதுதான், "அவரை கொலைசெய்தீர்கள், தேவனோ அவரை எழுப்பினார்." (அப். 3:14-15) அது ரொம்ப எளிமையான ஒன்று. "நீங்கள் அவரை கொலைசெய்தீர்கள், தேவனோ அவரை எழுப்பினார்." ஆனா இதுல என்னன்னா, இந்த சடங்குகளோடு செய்தியும் அவர்களுக்கு சொல்லப்படுகிறது. அதுமட்டுமில்ல, இப்ப அப்போஸ்தலர்கள் அந்த காரியங்களை எழுத்து வடிவில் வெளியிட்டனர். இங்க இரண்டு கேள்விகளை முன்வைக்கை விரும்புகிறேன், அவர்கள் சொன்னதை என்னவென்று அழைத்தார்கள்? அவர்கள் எழுதியவைகளை என்னவென்று அழைத்தார்கள்?

**Dr. டேரல் பாக்:** இது ஒரு பதிலை கொண்ட இரு கேள்விகள். அவை இரண்டையும் அவர்கள் தேவனுடைய வார்த்தை என்று அழைத்தார்கள். பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் தேவன் வார்த்தையாக இருந்தது. அப்போஸ்தலர்களால் எழுதப்பட்ட நிருபங்களில் எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகள் அங்குள்ள சபைகளுக்கு அனுப்பப்பட்டது அது அவர்களால் எழுதப்பட்ட சுவிசேஷ வார்த்தைகள் அல்லது அவர்களுக்கு உதவியாக இருந்தவர்கள் எழுதின தேவ வார்த்தைகளாகும். உண்மையில், அது தேவனுடைய வார்த்தையின் ஒரு பாகமாக இருக்கிறது. இது தேவனிடத்தில் இருந்து பெறப்பட்ட வார்த்தை என்று கூறுகிறோம்.இது அவரிடத்தில் இருந்து வந்த வெளிப்பாடாக

பெறப்பட்ட வார்த்தையாக கருதப்படுகிறது, இங்குதான் இது அதிகாரம் உடையதாக மாறுகிறது, இங்குதான் இதற்கான மதிப்பும் கனமும் கிடைக்கப்படுகிறது. எனவே இந்த சுவிசேஷ செய்தியானது ஜீவனுள்ள தேவனிடமிருந்து மனுக்குலத்திற்கு கிடைக்கபெற்ற செய்தியாகும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உண்மையாக இது ஆச்சரியத்தை உண்டாக்குகிறது இவர்கள் எல்லாரும், பேசுகிற போது, தேவனுடைய வார்த்தையை பேசுகிறோம் என்று விசுவாசத்தோடு இருந்தார்கள். அவர்கள் அவைகளை எழுதிய போது, அவர்கள் நம்மிடம் இருக்கிற இந்த தேவனுடைய வார்த்தைகளைத்தான் எழுதியிருக்கிறார்கள். சரி, இப்ப ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம், நாம திரும்ப வந்ததும் ஒரு கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன் பேதுரு காபி குடித்து கொண்டிருக்கையில், அவன் தேவனுடைய வார்த்தையை உரையாடிகொண்டிருந்தாரா? அதைப்பற்றி திரும்ப வந்ததும் பார்க்கலாம் அதனுடைய அர்த்தம் என்ன. சில நிமிடங்களில் மீண்டும் தொடர்ந்திடலாம்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வரவேற்கிறோம். நாம் இப்போது வரலாற்றி இயேசு என்பதை பற்றி Dr. டேரல் பாக் மற்றும் Dr. டேனியேல் வால்லேஸ் இருவருடன் பேசிகொண்டிருக்கிறோம். இயேசுவை குறித்து இன்றைக்கு பரவலாக பேசப்படும் காரியத்தை எதிர்கொள்ள இன்றைய கிறிஸ்தவர்கள் அறிந்திருக்க வேண்டிய சில அடிப்படை காரியங்களை குறித்து புதிய கருத்துகளை குறித்து பகிர்ந்துகொண்டு இருக்கிறோம், அதைதான் டேரல் மற்றும் டேன் இயேசுதுவம் வர்சஸ் கிறிஸ்த்தவம் என்று கூறுகின்றனர். அந்த அவுட்லைன நாம பூர்த்தி செய்திட விரும்புகிறோம், இப்ப, இயேசு வாழ்ந்தார் என்பது உண்மை, 12 அப்போஸ்தலர்களை அவர் தெரிந்து எடுத்தார், இயேசு மரித்தார், மரணத்திலிருந்து உயித்தார். அதற்கு பிறகுதான் 50 நாள் கழித்து பெந்தெகோஸ்தே நாள் வந்தது. இயேசு மூன்று வருடங்களாக கற்றுகொடுத்த காரியங்களை அவர்கள் ஐம்பது நாட்களில் மறந்திருக்க வாய்ப்பு இல்லை என்று நினைக்கிறோம். அவர்கள் அப்போது பிரசங்கித்தது குறித்து வைக்கப்பட்டிருக்கிறது, 3000 பேர் மனமாற்றமடைந்தார்கள். ரோம சாம்ராஜ்யம் முழுவதும் சுற்றி திரிந்து , அந்த செய்தியின் அடிப்படையில் சபையை ஸ்தாபித்தனர். இப்ப ஜீவனோடு இருக்கிற அப்போஸ்தலர்கள் ஜனங்களை சீர்படுத்துகிறவர்களாக சுற்றி திரிந்தார்கள். அங்குதான் சபைகளில் பிரசங்கிக்கப்பட்ட உபதேசத்தின் மையக்கருத்து எல்லாருக்கும் போதிக்கபப்டுகிறது, உபதேச கூற்றுகள், கீர்த்தனைகள் கிடைத்தது, சடங்குகள் அனைத்தும் பெறப்பெற்றோம். கிபி 30 தில் இருந்து நீங்க பின்னால போனோம் இயேசு பரம்ஏறின பிறகு நாற்பதுகளில், ஐம்பதுகளில் அறுபதுகளில், பார்க்கும்போது, இப்ப அப்போஸ்தலர்கள் ஒவ்வொருத்தராக மரிக்கிறார்கள், ஆனா அவர்கள் மரிப்பதற்கு முன்பு நிருபங்களையும் புத்தகங்களையும் எழுதினார்கள். ஆதிநாட்களில் எந்த எந்த புத்தகங்கள் வெளியாயின?

**Dr. டேரல் பாக்:** சரி, அதிகால புத்தகங்கள் நாற்பதுகளில் வந்தது என்று நினைக்கிறோம். சிலர் அதில் யாக்கோபையும் சேர்த்து கொள்கிறார்கள். கலாத்தியர் பொதுவாக

நாற்பதுகளின் இறுதியில் வெளிவந்தது என்று கூறுகின்றனர். அதற்கு பிறகு ஐம்பதுகளில் வெளியிடப்படுகிற காரியங்கள் பலவிதமான நிருபங்களை வெளியிட்டது. அது அறுபதுகள் வரைக்கும் தொடர்ந்துகொண்டே இருந்தது. பாரம்பரியமாக, பேதுரு மற்றும் பவுல் இருவரும் கொல்லப்பட்டனர், இரத்த சாட்சியாக, அவர்கள் விசுவாசத்திற்காக, பிரசங்கித்த காரியங்களினால் அறுபதுகளின் மைத்திய நாட்களில் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. அடுத்த கடைசியாக வந்த புத்தகம், 90 மற்றும் அதற்கு பின்னாட்கள் என்று சொல்லும்போது பெரும்பாலனவர்கள் வெளிப்படுத்தலை நிறுத்துகிறார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி,. எல்லாரும் ஒன்றை யோசிக்கிறார்கள் சரியா, இயேசு முப்பதில் மரித்தார், இந்த புத்தகங்கள் எல்லாம் நாற்பதுகளில் இருந்து துவங்குகிறது, இயேசு இல்லாம இப்ப பத்திலிருந்து பதினைந்து ஆண்டுகள் கடந்துவிட்டது. இப்ப ஜீவனோடு இருக்கிற அப்போஸ்தலர்கள் இருக்கிறார்கள், எங்கும் சபைகளை ஸ்தாபித்து கொண்டிருந்தார்கள். கேள்வி என்னன்னா, முதல் நாளில் இருந்து சபைகளில் காணப்பட்ட காரியங்களில் போதிக்கப்பட்டவைகளில் பெரும்பாலானவற்றை முழுவதுமாக மாற்றுவதாக இருந்ததா, அப்போஸ்தலர்கள் என்ன சொன்னார்கள்? ஏதாவது ஒரு பெரிய திருப்பத்தை உண்டாக்கினதா விசுவாசத்தின் இயேசு மற்று சரித்திர இயேசுவுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னது? ஆல்ரைட், இப்ப அவங்க அவங்களோட நிருபங்களை எழுத ஆரம்பித்தார்கள்., சரியா? ஆனா சுவாரஸ்யமான விஷயம் என்னன்னா நமது நிகழ்ச்சியின் இறுதி பகுதிதான் பெரிய ஆர்ச்சரியத்தை உண்டாக்குவதாக இருக்கும்.அது என்னன்னா, அவர்கள் போதிக்கும்போது தேவனுடைய வார்த்தையை தான் பேசினார்கள் என்று சொல்லபடுகிறது உண்மை ஏனன்னா அவர்கள் எழுதிய வார்த்தையை எல்லாம் தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. அதற்கான நிருபனத்தை சொல்லுங்க.

**Dr. டேரல் பாக்:** சரி, இங்க நாம நினைவுகூர வேண்டிய காரியம் என்னன்னு கேட்டீங்கனா, அதாவது, தேவனுடைய வார்த்தை என்று சொன்னதும் நமது மனம் உடனே இந்த புத்தகத்தை தான் பார்க்கிறது. வேதாகமத்தை தான் லெதர் அட்டை கொண்ட பரிசுத்த வேதாகமம் என்று இருபதுதான் நினைவிற்கு வருகிறது. ஆனா உண்மையா, புதிய ஏற்பாடுகளில் பல பகுதிகளில் தேவனுடைய வார்த்தை என்று கேட்கும்போது, நீங்க சுவிசேஷத்தின் செய்தி பிரசங்கிக்கபடுகிறதை கேட்கிறோம் அதைதான் அப்போஸ்தலர்கள் வெளிப்படுத்தினார்கள். அதை வெளிப்படுத்துகிற பல பகுதிகள் இருக்கிறது. டேன்னுக்கு அருமையான சத்தம் இருக்கிறது....

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இப்ப இயேசுவில் இருந்து ஆரம்பித்திடலாம். இதற்கு ஆதாரங்கள் தேவை என்று இதை கேட்டுகொண்டிருக்கிற நேயர்கள் விரும்புகிறார்கள், முதலாவதாக, இயேசு தம்முடைய வார்த்தைகள் அனைத்தும் தேவனுடைய வார்த்தைகள் என்று நம்பினார் அப்போஸ்தலர்களும் அதைதான் பிரசங்கித்தனர். உண்மை என்னன்னா, அவர்களுடைய எழுத்துக்களை இப்படியும் சொல்லுகிறார்கள். அதை நாம் எந்த கண்ணோட்டத்தில் பேச வேண்டும். அதற்கு முன்னால.... இயேசு கூறிய காரியங்களை எனக்கு சொல்லுங்கள்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** சரி, உங்ககிட்ட யோவான் 3:34 இருக்குதுல்ல அங்க இயேசு தம்மை குறித்து தாமே சொல்வதை பார்க்க முடியும் அவர் சொல்கிறார், “தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளை பேசுகிறார்.”

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** அதாவது, இது தன்னிலே தானே வியப்பூட்டும் காரியமாக இருக்கிறது. ஆல்ரைட், அப்போஸ்தலர்களை பார்க்கலாம்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** அடுத்ததாக 1 தேசலோனிகேயர் 2:13 சிறந்த உதாரணமாக காணப்படுகிறது. “ஆகையால் நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுகொள்ளாமல் தேவ வசனமாகவே ஏற்றுகொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.” இப்ப இந்த இடத்தில் பவுல் என்ன செய்கிறார் என்றால், நமக்கு இவை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது, நீங்க வசனத்தை கேட்கல தேவனுடைய வார்த்தையை தான் கேட்டீர் என்று சொல்லப்படுகிறது, அதாவது கிறிஸ்துவை குறித்த கேரிக்மா அல்லது அப்போஸ்தலர்களின் உபதேசங்கள் தான் அந்த உபதேசம்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், இப்ப அடுத்த நிலைக்கு போகலாம், உண்மையில் ஒரு விஷயத்தை நாம் புரிந்து கொள்ள முடியும் பேதுரு காபி அருந்திகொண்டிருக்கும்போது, அதாவது, எல்லா வார்த்தையும் வசனங்களாக இல்லை. ஆனா நம்ம ஏன்னா பார்க்கிறோம் என்றால் பொதுவாக இந்த செய்திகள் எல்லாம் தேவன் சொல்லும்படியாக விரும்பினது தானே, சரியா? ஆனா அவர்கள் எழுதத்துவங்கின போது ஒரு பிடிப்பு அந்த இடத்தில் துவங்கினது. அல்லது எனக்காக அதை ஏற்றுகொள்ளுங்கள். அவர்கள் எழுதிய போது, அவர்கள் எழுதினது எல்லாம் தேவனுடைய வார்த்தை என்று நாம் எப்படி அறிந்துகொள்ள முடியும், அப்படின்னா இதை எப்படி தேவனுடைய வார்த்தைன்னு எடுத்துகொள்ளலாம்?

**Dr. டேரல் பாக்:** சரி, அவைகளை அவர்கள் எழுத்துக்களாக கருதினார்கள், மேலும், இதுவும் தேவனுடைய செய்திதான். அவர்கள் சுவிசேஷத்தை தான் அந்த காலத்திற்கு ஏற்றார் போல எழுதுகிறார்கள், ஏன்னா இப்ப சபைக்குள் நடக்கிற பல காரியங்களை அவை அங்குமிங்கும் தொடுவதாக இருக்கிறது. ஆனால் அந்த நிருபங்களில் ஆங்காங்கே சில இடங்களில், “நான் எழுதுகிறதை நீங்கள் நம்பாவிட்டால், அதாவது, “ இதை என் சுயமாக நான் எழுதாமல் ஆவியினாலே எழுதுகிறேன் என்றார்.” அல்லது அவர் சொல்கிறார், “ நாங்கள் உங்களோடு சொல்லுகிற இந்த வார்த்தைகள் அனைத்தும், மனுஷ ஞானத்தினால் உண்டான வார்த்தையல்ல, ஆனால் அவை ஆவிக்குரிய சத்தியமும் ஆவிக்குரிய வார்த்தைகளுமாக இருக்கிறது.” அதனால் இந்த காரியம் தெளிவாகிறது அதாவது சொல்லப்படுகிற அனைத்தும் தேவனுடைய ஞானத்தினால் உண்டாகிறது, தேவனிடமிருந்து வருகிற வார்த்தை, ஆகும். இப்ப இது யூதருக்குள் ஆச்சரியமூட்டுவதாக இல்லை. இதே போன்ற காரியங்களை செய்கிற தீர்க்கதரிசிகளை பற்றி கேள்விபட்டிருக்கிறோம்.

யூதருக்குள் இருந்து இந்த காரியங்கள் வரும் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. ஜனங்கள் இந்த யோசனை சிந்தனையில் சவுகரியமாக உணருகிறார்கள். அதுதான் இந்த

வார்த்தைகளை அவர்களே சொல்லும்படியாக வழிசெய்தது அதாவர்து பவுல் சொன்னதினால் அந்த அதிகாரம் பெறவில்லை, பேதுரு இதை அதிகாரத்தோடு சொல்லவில்லை, இவை ஜீவனுள்ள தேவனிடமிருந்து வருகிறது என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். தேவன் இந்த ஆசிரியர்கள் மூலமாக இந்த செய்திகள் மூலமாக பேசுகிறார் என்பதை தெரிந்துகொண்டனர்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இப்ப அடுத்தது பார்க்கலாம். நா கிறிஸ்தவன் இல்ல, அப்ப கிறிஸ்தவர்களை நாம் பார்க்கும்போது அவர்கள் இதை முக்கியமானதாக கருதுவதாக எனக்கு தோன்றிடும்.

**Dr. டேரல் பாக்:** அது தான் சரியானது. இதற்காக தான் இந்த காரணமாகத்தான் அப்போஸ்தலர்கள் இருக்கிறார்கள், அப்போஸ்தலர் என்பவர் அனுப்பப்பட்ட நபராக இருக்கிறார். அவர் ஒரு வேலையாக அனுப்பப்பட்டவர், வல்லமையாக இருப்பார். யூதாஸின் இடம் நிரப்பப்பட்ட போது, இயேசுவின் ஊழியத்தில் ஆரம்ப முதல் நம்மோடு இருந்தவர்கள் எல்லாவற்றையும் கூட இருந்த பார்த்த ஒருவரை தான் நாம் நம்மோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றனர்.(அப். 1:20-22) அப்போஸ்தலனாக இருப்பதற்கு வேண்டிய தகுதிகள் மிகவும் முக்கியமானவைகளாக இருக்கிறது.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** நீங்க சொல்றது என்னன்னு பார்த்தா யோவான் ஸ்நானகன் துவங்கி பரம் ஏறுதல் வரைக்கும் எல்லாவற்றையும் கண்ணார கண்ட சாட்சிகள் அதிகாரப்பூர்வமானவர்கள் இவர்கள் தான், இது தான் இங்க திறவுகோல் விஷயம்.

**Dr. டேரல் பாக்:** நிச்சயமா. இது முற்றிலும் ஜீவனுள்ள இயேசு கிறிஸ்துவோடு வெளிப்படுகிற அனுபவமாக இருக்கிறது. சரி, இதுல ஒரு விஷயத்தை பார்க்கும்போது, இதெல்லா அனுபவமும் யாருக்கு ஏற்ப்பட்டது என்றால், அது பவுல். ஆனா பவுல் உயிர்த்தெழுந்த தேவனின் அனுபவத்தை பெற்றார், அது தவறுதலான அனுபவம் அல்ல. அதாவது இது சூத்திரத்தின் மறுபகுதியை வெளிபடுத்துகிறது, அவருடைய பூமிக்குரிய ஊழியமல்ல, ஆனா உயிர்த்தெழுந்த இயேசுவின் அனுபவம். ஆதலால், உண்மையில், இந்த அனுபவம் தான் உபத்திரவப்படுத்துகிறவனாக இருந்த பவுலை இப்போது அவன் விசுவாசிக்கிற காரியத்திற்காக உபத்திரவப்படவும் ஆயத்தமானான்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** அவர் வெளியில் இருந்து எழும்பின சாட்சியாக மாறினார், ஆமா....

**Dr. டேரல் பாக்:** அதுதான் சரி.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** .... ஒரு வகையான. அதாவது கிறிஸ்தவர்களுக்கு பிறகு வந்தவர், ஒரு நல்ல காரணத்திற்காக வந்தார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஓகே, இங்க ஒருசில காரியங்கள் இருக்கு. அப்போஸ்தலர்கள் அல்லது அப்போஸ்தலர்கள் கூட இருந்தவர்கள்  இருந்தவர்கள் பற்றி அறிந்துகொள்ள இருபத்தி ஏழு புத்தகங்கள் இருக்கிறது அதில் கண்ணார கண்ட சாட்சிகள் அந்த தகவல்களை நேரடியாக கேட்டவர்கள், இயேசுவோடு குறிப்பிட்ட காலத்திற்கு

இருந்தவர்கள் இருக்காங்க, சரியா? அவர்கள் மரித்த போது அந்த தகவல்கள் எந்தவிதமானதாக இருக்கிறது. ஏன்?

**Dr. டேரல் பாக்:** ஏன்னா அவங்க உயிரோட இல்ல.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஜனங்களுடைய மனதில் இது பதிய வேண்டும் என்று விரும்புகிறேன். உண்மையிலேயே, கிபி 100 க்குள் அவர்கள் எல்லாரும் மரித்துவிட்டார்கள்.

**Dr. டேரல் பாக்:** ஆமா. இன்னொரு விதமாக இதை சொல்லவேண்டும் என்றால் அப்போஸ்தலர்கள் மரித்த போது ஜீவனுள்ள சாட்சிகளின் வார்த்தைகள் மரித்துவிட்டன என்றிடலாம்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** ரைட்.

**Dr. டேரல் பாக்:** இப்ப இயேசுவை பற்றி சொல்லுகிற எல்லாரும் அடுத்த நிலையை சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்றிடலாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இதற்கான நிருபபனத்தை இக்னேஷியஸ் பதிவுகளில் பார்த்தார் அப்போஸ்தலர்களை பின்பற்றிய மாணவர்கள் எல்லாரும் அப்போஸ்தலர்களை போல விவரங்களை விளக்கி கூருகிறவர்கலாக பார்ப்பது கிடையாது. அதற்கு உதாரணம் சொல்லுங்க.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** ரைட். இக்னேஷியஸ் கூறுகிறார் திரால்லியன்ஸ் 3:3 மக்நீசியன்ஸ் சுக்கு எழுதிய கடிதத்திலும் மற்ற இடங்களிலும் அவர் சொல்லியிருப்பதை பார்க்க முடியும், கேளுங்க, நா பவுலோ பேதுருவோ இல்ல. நா அப்போஸ்தலனும் அல்ல. நான் மனம் மாறினவன். அவர்களை போல என்னால் கட்டளையிட முடியாது. அவர் எதற்காக இந்த காரியங்களை சொல்லுகிறார் என்றால், உங்கள் மீது எனக்கு அதிகாரம் இருந்தாலும், அந்த அதிகாரம் வேறொருவருடைய அதிகாரத்தில் இறுதி எடுக்கப்பட்ட ஈர்க்கப்பட்ட அதிகாரமாக இருக்கிறது.

**Dr. டேரல் பாக்:** மேலும் தேவனுடைய வார்த்தை பற்றி அவர்கள் சொல்லும்போது எப்போதுமே அது ஒன்று ஆதிகாலத்தில் எழுதப்பட்ட வார்த்தைகளை சுட்டி காண்பிப்பதாக இருந்திடும் இல்லாவிட்டார் அவர்கள் தங்கள் செய்தியின் ஒரு பகுதியை சிட்டி காட்டுகிறார்கள் அதாவேது சபையானது தேவனுடைய வார்த்தை என்று நம்புகிற சுவிஷேஷத்தில் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இன்றைக்கு ஒரு விவாதம் துவங்குகிறது அந்த விவாதம் இயேசுதுவம் கிறிஸ்தவம் என்பதற்கு இடையே இருக்கிறது. இங்க அவங்க பயன்படுத்துகிற சிறிய காரியம் என்னான்னா ஆதிகால வார்த்தைகளை அவர்கள் எப்படி பயன்படுத்தினார்கள், சரியா? அதை விளக்கிடுங்கள். ஒரு நிமிடம் மட்டும்தான் மீதமிருக்கிறது.

**Dr. டேரல் பாக்:** ஆதிநாட்கள் என்றால் கிட்டத்தட்ட 1 முதல் நான்காம் நூற்றாண்டு வரைக்கும் உள்ளவை, பொதுவாக அது இரண்டு மூன்று நான்காம் நூற்றாண்டு. ஆதிகாலம் என்பது முதலாம் நூற்றாண்டை குறிக்கிறது. அப்ப உங்களுக்கு கிடைக்க

கூடிய கூற்று, ஆதி கிறிஸ்தவம் பிரிந்தது, அல்லது கிறிஸ்தவர்களுக்கு இணையாக எழும்பினார்கள்: இவை அனைத்தும் உண்டானது, இரண்டாம் மூன்றாம் நான்காம் நூற்றாண்டில் இதற்கான ஆதாரத்தை நாம் பார்க்க முடியும், ஆனால் நம்முடைய ஆதி ஆவங்களில் அது இல்லை. இயேசுதுவம் என்கிறகருத்தானது இரண்டாம் மூன்றாம் நான்காம் நூற்றாண்டில் இருந்து வந்தது, முதல் நூற்றாண்டில் என்ன நடந்தது என்பதையும் பார்க்க இருக்கிறோம், அதற்கான வலுவான ஆதாரங்கள் நம்மிடம் இல்லை இருந்தாலும் சரி.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, உண்மையா சொன்னா கிறிஸ்தவத்தில் திடகாத்திரமான ஆதாரங்கள் நமக்கு இருக்கிறது, திடமான ஆவணங்கள், மற்றவர்கள் இரண்டாம் நூற்றாண்டில் முதலில் சொல்லப்பட்ட காரியங்களை தான் எடுத்து காட்டி கூறுகின்றனர்.

**Dr. டேரல் பாக்:** அவர்களுடைய விவாதம் எப்படி இருக்கிறது என்றால் எல்லா பொருட்களும் நாசமாகிவிட்டதே, ஆதிகால ஆவணங்கள் அமிழ்ந்துவிட்டது என்று வாதிக்கின்றனர்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** ஆனா அதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

**Dr. டேரல் பாக்:** ஆமா. அமிழ்ந்துதல் பல பாவங்களை மூடுவதாக இருக்கிறது. அதற்கு உங்களால் எதையுமே செய்ய முடியாது, அவை அந்த நாட்கள் வரை கொண்டு செல்லுமா என்று கூட உங்களுக்கு தெரியாது. மிக முக்கியமானது இறையியலின் மைய பொருள்களை காண்பித்து ஓரளவுக்கு அந்த நாட்களுக்கு போக முயலலாம்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** இன்னொரு பக்கம் பார்க்கும்போது, நம்மிடம்...இருக்கிற ஆதிகால ஆவணங்கள் அனைத்தும் இந்த கிறிஸ்தவ ஆவணங்கள் மட்டும்தான்.. அதாவது, முதல் நூற்றாண்டில் இருந்து வந்த இந்த ஆவணங்களில் தான் நிருபணங்கள் இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இது எனக்கு திடமான காரியமாக தெரிகிறது. இதிலிருந்து ஒரு வரலாற்று சுவடி தொடர்ந்து போய்கொண்டே இருக்கிறது, அந்த செய்தியின் சாராம்சம். இதோடு முடிந்து போவது கிடையாது. அடுத்த வாரம் தொடர்ந்து பார்க்க இருக்கிறோம் இந்த அவுட்லைனை முடிக்க விரும்புகிறோம். அப்போஸ்தலருடைய மாணவர்கள் அப்போஸ்தலர்களை பற்றி என்ன சொன்னார்கள் அவர்களுடைய எழுத்துகளை பற்றி என்ன சொல்கிறார்கள் என்று பார்க்கலாம், சரியா? அவர்கள் எப்போது இதை எழுதினார்கள். அதற்கு பிறகு அப்படியே சபை பிதாக்களை பற்றி பார்க்கலாம். அதற்கு அடுத்து, விடுபட்ட சுவிசேஷங்களை பற்றி பார்க்க இருக்கிறோம், இந்த கினாச்டிக் கிறிஸ்தவம் இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறது. சரி, நேயர்களே, நீங்கள் எங்களோடு இணைந்து இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன் ஏன்னா இதெல்லாம் இன்றைக்கு நம்மை சுற்றி நடக்கிற விவாதங்களை பற்றிய சரியான புரிந்துகொள்ளுதலை கொடுக்கும் முக்கியமான காரியங்களாகும், நம்மை சுற்றி இருக்கிற சமூதாயத்தினர் கேட்கும் கேள்விகளாக இருக்கிறது. நிகழ்ச்சியில் கலந்துகொண்டமைக்கு நன்றி. அடுத்த வாரம் சந்திக்கலாம்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.